**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை:- திரு எஸ்.பிரபா சந்திரன், B.L.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்**

**2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2057, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 31 ம் தேதி)**

**I.A.No.2/2023 in O.S.No.150/2019**

**(CNR No. TNNM01-001434-2019)**

சந்திரசேகர்

..... மனுதாரர்/வாதி

-எதிராக-

கிருஷ்ணமூர்த்தி .....எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 25.06.2025 ம் தேதியன்று கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கே.மணி அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பெ.முத்துவேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுவில் கண்டுள்ளவாறு தாவா பிராதை திருத்தம் செய்துக்கொள்ள அனுமதியளிக்க கோரி கட்டளை 6 விதி 17 சி.பி.சி-யின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்-**

மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கினை பாகப்பிரிவினை பரிகாரத்திற்கும், தனி சுவாதீனம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களாகும். மனுதாரரின் சகோதரிகள் மற்றும் சகோதரரின் மகள் ஆகியோரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணத்தை பெற்றுள்ளார். மனுதாரரின் சகோதரர் சுப்ரமணியன் 1980 ம் ஆண்டில் இறந்துவிட்டார். மற்றொரு சகோதரரான சீனிவாசன் என்பவர் மனுதாரரின் தகப்பனாரான முத்தையா என்பவர் இறப்பதற்கு

முன்பே இறந்துவிட்டார். இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005 ன்படி இந்து கூட்டுக்குடும்ப சொத்தில் ஆண்வாரிசுகளுக்கு உள்ளது போல் பெண் வாரிசுகளுக்கும் சமமான உரிமை உள்ளது. மனுதாரரின் தகப்பானர் 19.4.1993 ம் தேதியன்று இறந்துவிட்டார். இந்து வாரிசுரிமைப்படி சுப்ரமணியத்தின் மகளான சாந்தி, ராஜசேகர் என்கிற ராஜாமுத்தையா, பத்மலோசனி, யசோதா மற்றும் மனுதாரர், மனுதாரரின் தாயாரான தனலட்சுமி அம்மாள் ஆகியோர்கள் முதல்வகுப்பு வாரரிசுகள் என்ற முறையில் இந்து வாரரிசுரிமை சட்டம் பிரிவு 8–ன்படி சரிபாக உரிமையுண்டு. மனுதாரருக்கு தாவா சொத்தில் 1/6 பாகம் உரிமையுண்டு. மனுதாரரின் சகோதரியான பத்மலோசனி, யசோதா மற்றும் சாந்தி ஆகியோர்கள் அவர்களுடைய பாகத்தை பொறுத்து மனுதாரருக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளனர். மனுதாரருக்கு மேற்கண்ட வகையில் 3/6 பாகம் பாத்தியமானது. ஏற்கனவே மனுதாரருக்கு அவருடைய பாகம் 1/6 பாகம் உள்ளது. ஆகவே தாவா சொத்தில் மனுதாரருக்கு 4/6 பாகமும், மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரரான ராஜா முத்தையாவிற்கும் தலா 1/6 பாகம் உள்ளது. மனுதாரரின் தாயார் தாவா சொத்து முழுவதையும் உயில் எழுதி வைத்துள்ளார். அந்த உயிலானது இல்லா நிலையது, செல்லாத ஆவணமாகும். மனுதாரரின் தாயார் 25.5.2008 ம் தேதியில இறந்துவிட்டார். அவருடைய 1/6 பாகமானது மனுதாரருக்கும், அவருடைய சகோதரர் ராஜமுத்தையாவிற்கும் மனுதாரரின் சகோதரிகள் மற்றும் சகோதரரின் மகள் ஆகியோருக்கு சென்றடைகிறது. அந்த வகையில் மனுதாரின் தாயாரின் 1/6 பாகமானது ஐந்து வாரிசுகளுக்கு சமமாக பிரிக்கப்படும் வகையில், மனுதாரருக்கு 1/6 பங்கில் 4/5 பங்கு பாகம் கிடைக்கப்பெறும் என்பது 25/30 பங்கு பாகமாகும். மீதமுள்ள 5/30 பாகமானது மனுதாரரின் சகோதரரான ராஜமுத்தையாவிற்கு சென்றடையும். அவ்வகையில் 150/180 பங்கு பாகம் மனுதாரருக்கும், 30/180 பாகம் மனுதாரரின் சகோதர் ராஜமுத்தையாவுக்கும் பங்கு பாகம் சென்றடையும். ராஜமுத்தையா இறந்துவிட்டதாக அனுமானிக்கப்படும் நிலையில் தாவா சொத்து முழுவதும் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது. ராஜமுத்தையா உயிருடன் இருப்பதாக அனுமானிக்கப்படும் பட்சத்தில் 30/180 பாகமானது அவருடைய விருப்பப்படி சென்றடையும். ராஜாமுத்தையாவின் பொது அதிகார முகவர் பத்மலோசனி 2006 ம்

வருடத்தில் இறந்துவிட்டார். எனவே பொது அதிகார ஆவணமானது செயலிழந்து விட்டது. ராஜா முத்தையா உயிருடன் இருப்பதாக ஒரு முடிவுக்கு வந்தால், மனுதாரருக்கு 150/180 பங்குகள் கிடைக்கும். வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள பங்கு கணக்கீட்டு விவரம் சரியாக காண்பிக்கப்படவில்லை என்பதால் தாவா பிராது திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. வழக்குரையை திருத்தம் செய்வதால் பிரதிவாதிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. எனவே மனுவில் கண்டுள்ளவாறு தாவா பிராதினை திருத்தம் செய்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்–</u>**

மனுதாரர் மனுவினை தாக்கல் செய்ய சட்டப்படி எந்தவித உரிமையும் இல்லை. அசல் வழக்கில் இப்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை மனுவில் பரிசீலனைக்காக ஏற்றுக்கொள்ள வேண்டும். வாதி பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியிருப்பது உண்மை. தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்பது உண்மை. மனுதாரர் தாவா ஏ அட்டவணை சொத்தினை பொருத்து அவருக்கு மட்டுமே உரிமை மூலம் உள்ளது என்று வழக்குரையில் தெரிவித்தும், a) பரிகாரமாக தாவா ஏ அட்டவணை சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை இப்பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ அவரின் கீழ் அதிகாரம் பெற்றவர்களோ, எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். மேலும் அசல் வழக்கில் வாதி b) பரிகாரமாக தாவா பி அட்டவணை சொத்தினை பொருத்து ஏற்பட்டுள்ள கிரைய பத்திரங்கள் செல்லத்தக்கதா அல்லது வேறு வகையில் தீர்மானிக்கப்பட வேண்டியதா என்பதை வாதியோ, அவரது வாரிசுகளோ தேவையான சூழ்நிலையில் வழக்கு தாக்கல் செய்து தீர்மானிக்கும் பொருட்டு சமூகம் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு வழக்குரையில் பி பரிகாரமாக கோரியுள்ளார். அசல் வழக்கில் தாவா ஏ அட்டவணை சொத்துக்களை பொருத்து வாதி கேட்டுள்ள

எ பரிகாரமும், தாவா பி அட்டவணை சொத்துக்களை பொருத்து கேட்டுள்ள பி பரிகாரத்திற்கும் முற்றிலும் எதிராக தாவா ஏ, பி அட்டவணை சொத்துக்களில் விவசாயம் செய்யப்பட்டுள்ள கணக்குகளை பொருத்து நீதிமன்றத்தில் பணமாகவோ அல்லது வேறு வகையிலோ வைப்பீடு செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் எந்தவித முகாந்திரமும் இலலாமல் வழக்கினை நடத்தாமல் இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வீணாக நீதிமன்றத்தின் நேரத்தினை வீணடிக்க மனுவினை தாக்கல் செய்துள்ளார். வாதியின் சகோதரர் ராஜசேகர் என்கிற ராஜ் முத்தையா அமெரிக்காவில் நிரந்தரமாக வசித்து வந்ததால், பொது குடும்ப சொத்துக்களை இதர கூட்டு பாகஸ்தர்களிடம் பாகக்கறார் பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளவும், பின்னிட்டு பாகத்தில் பிரியும் சொத்துக்களை நிர்வகிக்கவும், அவருடன் பிறந்த சகோதரியான பத்மலோசனா என்பவருக்கு 12.12.1995 ம்தேதியன்று பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். பொது அதிகார பத்திரத்தினை ஏற்றுக்கொண்டு, பொது குடும்ப சொத்துக்களை 12.12.1996 ம் நாளன்று ராஜ்முத்தையாவின் பொது அதிகார முகவர் என்ற முறையில் பத்மலேசனாவும், வாதியும், வாதியின் தாயார் தனலட்சுமியும் பதிவு பாககறார் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினையில் ராஜ்முத்தையாவுக்கு பிரித்து விடப்பட்ட தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை அவரது அதிகார முகவரான பத்மலோசனா அவரது உடைமையில் வைத்து அனுபவித்து வந்து, தாவா ஏ அட்டவணை 1 வது அயிட்டத்தில் உள்ள 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை பொருத்தும், 2 வது அயிட்ட நிலத்தினை பொருத்தும் மற்றும் மேற்படி கிராம சர்வே எண்.324/1 பி–ல் 0.06 சென்ட் நிலத்திலும் பொதுப்பாதையிலும் பேர்பாதி பாத்தியத்தையும், சர்வே எண்.325/2 ஏ 2 ல் 0.30 சென்ட் நிலத்திலும், பொது கிணற்றிலும் பேர்பாதி பாத்தியத்தையும் மின் இணைப்பு எண்.503 5 HP மின்சார மோட்டார் முழு பாத்தியத்தையும், ராஜ்முத்தையாவின் அதிகார முகவரான பத்மலோசனா 5.2.1998 ம் தேதியன்று ஒரு ஆண்டு காலத்திற்கு வருட குத்தகை ரூ.5000/–க்கு இப்பிரதிவாதி வசம் குத்தகைக்கு விட்டு இப்பிரதிவாதியும் தாவா ஏ அட்டவணை சொத்துக்களை குத்தகை சாகுபடி செய்து அனுபவித்து வருகின்றனர். 5.2.1998 ம் நாளன்று

குத்தகை ஒப்பந்த பத்திரமும் இப்பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு ராஜ்முத்தையாவின் அதிகார முகவர் தாவா ஏ அட்டவணை நிலங்களுக்குண்டான குத்தகை காலத்தை நீட்டிப்பு செய்தும், அதற்குண்டான குத்தகையை பெற்றுக்கொண்டும் அசல் குத்தகை ஒப்பந்தத்தில் 2.3.1999 மற்றும் 30.3.2000 ஆகிய தேதிகளில் ஆண்டு குத்தகை ரூ.5000/– வீதம் முறையே பெற்றுக்கொண்டு மேற்குறிப்பு எழுதிக்கொடுத்துள்ளார். தாவா ஏ அட்டவணை சொத்துக்களை பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டு கிரைய தொகை ரூ.4,00,000/– ம் என்று நிர்ணயிக்கப்பட்டு, ராஜசேகர் என்கிற ராஜ்முத்தையாவுக்காக அவரது அதிகார முகவரான பத்மலோசனாவுக்கும், பிரதிவாதிக்கும் இடையே 11.9.2006 ம் நாளன்று கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. அன்றையதினம் கிரைய தொகையில் முன்தொகையாக ரூ.1,00,000/–ஐ பிரதிவாதியிடமிருந்து அதிகார முகவர் பத்மலோசனா பெற்றுக்கொண்டார். அதன் பிறகு கிரைய பாக்கி தொகை ரூ.3,00,000/–ல் 17.1.2007 தேதியன்று ரூ.1,00,000/–யும், 24.1.2007 தேதியன்று ரூ.1,00,000/–யும், 1.2.2007 தேதியன்று மீதமுள்ள ரூ.1,00,000/–யும் பிரதிவாதிகளிடமிருந்து ராஜ்முத்தையாவின் அதிகார முகவர் பத்மலோசனா பெற்றுக்கொண்டு, இப்பிரதிவாதிக்கு, மேற்கண்ட தொகைகளுக்கு ரசீதுகள் எழுதிக்கொடுத்துள்ளார். ஆனால் அதிகார முகவரான பத்மலோசனாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் படுக்கை ஓய்வு எடுத்து வந்ததால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வந்து பத்திர பதிவு செய்து கொடுக்க இயலாத நிலையில் இருந்து வந்த நிலையில் அதிகார முகவரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து 16.4.2007 ம் தேதியன்று இறந்துவிட்டார்.

பின்னிட்டு அதிகார முகவரின் கணவரான மயில்வாகனம் என்பவர் தாவா ஏ அட்டவணை சொத்துக்களிலிருந்து இப்பிரதிவாதியை வெளியேற்ற முற்பட்டதால், இப்பிரதிவாதி மேற்படி மயில் வாகனம் மீது தாவா ஏ அட்டவணை சொத்துக்களை பொருத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.260/2008 என்ற எண்ணில் நாமக்கல் மாண்புமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததில் 15.7.2009 தேதியன்று

இப்பிரதிவாதிக்குஆதரவாக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிரைய ஒப்பந்த தேதிக்கு முன்பிருந்தே நாளது வரை தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் இப்பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதினத்திலுமே இருந்து வருகின்ற விவரம் தெரிந்தும், வாதி அவற்றை மறைத்து தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் அவரது சுவாதீனத்தில் இருப்பதாகவும், இப்பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா பி அட்டவணை சொத்துக்களை பொருத்து ஏற்பட்டுள்ள கிரைய பத்திரத்தின் செல்லுநிலை குறித்து வாதியோ, அவரது சட்டப்படியான வாரிசுகளோ வழக்கு தாக்கல் செய்வதற்கு அனுமதி வழங்கும் வகையில் பரிகாரம் கோர மனுதாரருக்கு உரிமையில்லை. தாவா பி அட்டவணை சொத்தினை பொறுத்து கணக்கு கேட்க வாதிக்கு உரிமையில்லை. உண்மையில் மனுதாரர் தாவா சி அட்டவணை சொத்துக்களை பொருத்து மட்டுமே பாகப்பிரிவினை கோரி இப்பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி, வழக்குரையில் தாவா ஏ அட்டவணை சொத்துக்களை பொருத்து இப்பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அற்றுபோய்விட்டது. எனவே மனுதாரருக்கு தாவா ஏ அட்டவணை சொத்துக்களை பொருத்து இப்பிரதிவாதியிடமிருந்து விவசாயம் செய்யப்பட்டது சம்பந்தமாக கணக்கு கேட்கவோ அல்லது விவசாய கணக்கினை பொருத்து பணமாகவோ அல்லது வேறு வகையிலோ வைப்பீடு செய்ய கோர எவ்வித உரிமையும் இல்லை. எனவே மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

4) **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்உரையின் சுருக்கம்–**

இந்த கூடுதல் எதிர்உரையில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் மற்றும் மறுக்கும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்/வாதி பிரமாணப்பத்திரிக்கையில் 3,6 8,9,10, 12 மற்றும் 13 பாராக்களில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையல்ல. மனுதாரருக்கு அவருடைய சகோதரிகள் மற்றும் சகோதரருடைய மகள் ஆகியோரிடமிருந்து பதிவு விடுதலை பத்திரம்

பெற்றுள்ளதாக கூறியுள்ளது சரியல்ல. மனுதாரருக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் பதிவு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. தாவா சொத்தில் மனுதாரருக்கு 1/6 பங்கு உள்ளதாக சொல்லியுள்ளது பொய். மனுதாரருடைய தாயார் தனலட்சுமி அம்மாள், தாவா சி அட்டவணை ஏக்.0.28–1/2 சென்ட் நிலத்தில் அவருக்குண்டான பாகத்தினை பொருத்து பிரதிவாதிக்கும், ராஜ்முத்தையாவிற்கும், வாதியின் சகோதரி பத்மலோசனாவிற்கும் ஆளுக்கொரு ஷெட்டியூல்களாக பிரித்து அச்சொத்துக்களை தனலட்சுமியின் ஆயுளுக்கு பிறகு மேற்கண்ட மூவருக்கும் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அனுபவித்து கொள்ளும் வகையில் 1.10.2004 தேதியன்று பதிவு உயில் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். வாதியின் தாயார் தனலட்சுமி அம்மாள் எழுதி கொடுத்துள்ள 1.10.2004 ம் நாளிட்ட பதிவு உயில் பத்திரத்தில் வாதி சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். மேலும், மேற்படி உயில் ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும்பொழுது, உயில் எழுதியவரை இன்னாரென்று அடையாளம் காட்டும் சாட்சியாகவும் வாதி சாட்சி கையொப்பமிட்டுள்ளார். வாதியின் சம்மதத்துடன் அவரது தாயார் தனலட்சுமி அம்மாள் உயில் சாசனம் எழுதியுள்ளார். அந்த உயிலில் உள்ள ஷரத்துக்களை படித்து பார்த்து தெரிந்துகொண்டும், உயில் எழுதப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டும் வாதி உயிலில் சாட்சி கையொப்பங்கள் செய்துள்ளார். அதனால் 1.10.2004 ம் நாளிட்ட வாதியின் தாயாரால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பதிவு உயில் இல்லாநிலையது மற்றும் செல்லாதது என்று கூறுவதற்கு வாதிக்கு சட்டப்படியும், நியாயப்படியும் எந்தவித உரிமையும் இல்லை. மனுதாரரின் தாயார் இறந்த நிலையில் அவருடைய 1/6 பங்கு பாகமானது மனுதாரர்/வாதிக்கும், அவரது சகோதரர் ராஜ்முத்தையாவுக்கும், சாந்திக்கும் மற்ற இரண்டு சகோதரிகளுக்கும் சென்றடைவதாகவும், அவ்வகையில் தனலட்சுமி அம்மாளின் 1/6 பங்கு பாகமானது 5 வாரிசுகளுக்கு சமமாக பிரிக்கப்படும் வகையில், மனுதாரர்/வாதிக்கு 1/ பங்கில் 4/5 பங்கு பாகம் கிடைக்கப்பெறும் என்பது 25/30 பங்கு பாகமாகும் என்றும் சொல்லியுள்ளது பொய். மீதமுள்ள 5/30 பங்கு பாகமானது ராஜ்முத்தையாவுக்கு சென்றடையும் என்றும், அந்த வகையில் 150/180 பங்கு பாகம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், ராஜ்முத்தையாவுக்கு 30/180 பங்கு சென்றடையும்

என்பதுபொய். பங்கு கணக்கீட்டு விவரங்கள் தவறு என்பதால் வழக்குரையை திருத்தம் செய்ய இயலாது. அசல் வழக்கில் வா.சா.1 ஆன வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர்/வாதியால் பொய்யான விவரங்களை தெரிவித்த தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாது.

உண்மையில், 20.8.1934ம் நாளிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி, இப்பிரதிவாதியின் தகப்பனார் தட்சிணாமூர்த்திக்கு, தாவா சொத்தில் 1/2 பங்கு பாக சொத்து பாத்தியப்பட்டதாகும். மேற்படி பாகப்பிரிவினைக்கு பிறகு, தட்சிணாமூர்த்தி அனுபவித்து வந்த மேற்படி 1/2 பங்கு பாக சொத்தினை தட்சிணாமூர்த்தியும், அவரது மகன்களான டி.முத்தையாவின் ஜெனரல் பவர் ஏஜெண்டான அவரது மனைவி ஞானசுந்தரம் அம்மாளும் மற்றும் இப்பிரதிவாதியும் சேர்ந்து 11.5.1968ம் தேதியன்று பதிவு பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகப்பிரிவினை செய்துக்கொண்டதில் இப்பிரதிவாதியின் பாகத்திற்கு தாவா சொத்தில் 1/4 பங்கு பாகம் பிரித்துவிடப்பட்டது. மீதமுள்ள 1/4 பங்கு பாகத்தினை இப்பிரதிவாதியின் சகோதரரான டி.முத்தையாவின் பாகத்திற்கு பிரித்துவிடப்பட்டு, அவரால் அனுபவிக்கப்பட்டு வந்து பின்னிட்டு வாதியின் தகப்பனார் டி.முத்தையாவிற்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். இப்பிரதிவாதியின் பாகத்திற்கு பிரித்துவிடப்பட்ட 1/4 பங்கு பாக சொத்தில் இப்பிரதிவாதி குடியிருந்து அனுபவித்து வருகின்றார்.மேற்சொல்லப்பட்டுள்ள விவரங்களை மறைத்தும், தாவா சொத்தில் இப்பிரதிவாதிக்குரிய 1/4 பங்கு பாக உரிமையை மறைத்தும் ஏதோ தாவா சொத்து முழுவதும் வாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது போல் நீதிமன்றத்திற்க பொய்யான விவரங்களை தெரிவித்து, அதனடிப்படையில் வழக்குரையில் பங்குரிமையை பொருத்து திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். உண்மை விவரங்களை தெரிவித்து வாதி மனுவினை தாக்கல் செய்யவில்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

5) மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**<u>6) இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணவேண்டிய சங்கதியாகும்.</u>**

**<u>தீர்வு</u>**

7) மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, அசல் வழக்கானது தாவா சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும், தாவா சி அட்டவணை சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரத்திற்கும், தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005 ன்படி பெண் வாரிசுகளுக்கும் பூர்வீக சொத்துக்களில் சம பாக உரிமையுண்டு. மனுதாரரின் சகோதரிகள் இந்த மனுதாரருக்கு அவர்களுடைய 3/6 பாகத்தை பொறுத்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளனர். இந்த மனுதாரரின் தாயார் இறந்த பின்னர் அவருடைய 1/6 பாகம் இந்த மனுதாரருக்கு பாத்தியமானது. இந்த மனுதாரரின் மற்றொரு சகோதரரான ராஜாமுத்தையா என்பவர் எங்கு உள்ளார் என்பது பல ஆண்டுகளாக தெரியாமல் உள்ளது. ஆகவே அவர் சட்டப்படி இறந்த நபராக கருதப்பட வேண்டியவர் ஆவார்.மேற்படி ராஜாமுத்தையா இறந்துவிட்டதாக தீர்மானிக்கப்பட்டால் இந்த மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் 150/180 பாகம் கிடைக்கத்தக்கது. மேற்படி ராஜாமுத்தையா இறந்த நபராக தீர்மானிக்கப்பட்டால் அவருடைய பாகம் இந்த மனுதாரருக்கு பாத்தியமானதாகும். ஆகவே மேற்படி சங்கதிகளை பொறுத்து பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. மேற்படி திருத்தம் வழக்கின் தன்மையை எவ்வகையிலும் மாற்றம் செய்யாது. ஆகவே நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

8) எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, பொது குடும்ப சொத்துக்களை பொறுத்து 12.12.1996 அன்று ராஜாமுத்தையாவின் பொது அதிகாரம் பெற்ற முகவரான பத்மலோசனா, வாதி மற்றும் வாதியின் தாயார்

தனலட்சுமி ஆகியோர்களுக்கிடையே பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு பாகம் பிரித்துக்கொண்டனர். ராஜாமுத்தையாவின் பாகத்தை இந்த பிரதிவாதி வருட குத்தகைக்கு ஓட்டிக்கொண்டு வருகிறார். தாவா ஏ அட்டவணை சொத்தை இந்த பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ராஜாமுத்தையாவின் அதிகாரம் பெற்ற முகவர் 11.9.2006 ல் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். பின்னர் பல்வேறு தேதிகளில் கிரைய பாக்கி தொகையை மேற்படி பத்மலோசனா பெற்றுக்கொண்டார். அதற்கான ரசீதுகளும் கொடுத்துள்ளார். இந்நிலையில் மேற்படி பத்மலோசனா 16.4.2007 ல் இறந்துவிட்டார். தாவா பி செட்யூல் சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து வாதி கோரும் பரிகாரம் பயனற்றதாகிவிட்டது. மனுதாரரின் தாயார் தனலட்சுமி இந்த மனுதாரரின் சம்மதத்துடன் 1.10.2004 ல் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதி வைத்துவிட்டு 25.5.2008 ல் இறந்துள்ளார். அப்படியிருக்க தாவா சொத்து முழுவதும் இந்த வாதிக்கு பாத்தியமானது என்பது போல் பிராதை திருத்தம் செய்ய கோருவது ஏற்கத்தக்கதல்ல. 11.5.1968 தேதியன்று ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் இந்த பிரதிவாதியின் பாகத்திற்கு தாவா சொத்தில் 1/4 பாகம் பிரித்து விடப்பட்டது. முத்தையாவின் பாகத்திற்கு 1/4 பாகம் பிரித்து விடப்பட்டு அவர் அனுபவித்து வந்து பின்னிட்டு வாதியின் தந்தையார் முத்தையாவிற்கு கிரையம் செய்துக்கொடுத்துள்ளார். அப்படியிருக்க இந்த பிரதிவாதிக்கு பாகமான ¼ பாகத்தை மறைத்து வாதி பொய்யாக இந்த வழக்கையும் இம்மனுவையும் தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

9) இந்த வழக்கானது தாவா ஏ செட்யூல் சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரியும், தாவா சி அட்டவணை சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சி அட்டவணை சொத்துக்களில் 1 முதல் 3, 6 இன

சொத்துக்களில் 6/8 பாகம் கோரியும், 7 வது இன சொத்தில் 2/4 பாகம் கோரியும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் வா.சா.1 ன் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த திருத்தல் மனுவில் கண்டுள்ள திருத்தல் விவரத்தில் வாதிக்கும் அவருடைய உடன் பிறந்தவர்களுக்கும், தாயாருக்கும் தலா 30/180 பாகம் பாத்தியமானது என்றும், அதில் இந்த வாதி பெயருக்கு ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணத்தின்படியும் மொத்தம் 150/180 பாகம் பாத்தியமானது என்றும், வாதியின் சகோதரரான ராஜாமுத்தையாவிற்கு 30/180 பாகம் பாத்தியமானது என்றும் மேற்படி ராஜாமுத்தையா தற்போது இறந்துவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கும் பட்சத்தில் தாவா சொத்து முழுவதும் இந்த வாதிக்கு பாத்தியமானது என்றும், ராஜாமுத்தையா உயிருடன் இருப்பதாக தீர்மானிக்கும்பட்சத்தில் அவருக்கு 30/180 பாகம் பாத்தியமானது என்றும் பிராதை திருத்தம் செய்ய இம்மனுவில் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது.

10) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையில் பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து 12.12.1996 ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்டுள்ளதாகவும், 11.5.1968 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்படி இந்த பிரதிவாதிக்கு தாவா சொத்தில் ¼ பாகம் பாத்தியமானது என சொல்லப்பட்டுள்ளது. எதிர்உரையில் சொல்லப்பட்டுள்ளது போல் பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து 12.12.1996 ல் பாகபிரிவினை ஏற்பட்டுள்ளதா என்பதையும், 11.5.1968 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்படி இந்த பிரதிவாதிக்கு 1/4 பாகம் உள்ளதா என்பதையும், அசல் வழக்கில் முழு விசாரணைக்கு பின்னர் தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் பிராதில் 9 மற்றும் 10 பாராக்களில் 14.7.1994 ல் வாதியின் சகோதரிகளான பத்மலோசனி, யசோதா மற்றும் சாந்தி ஆகியோர்கள் இந்த வாதிக்கு பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. ஆகவே தற்போது

இந்த மனுவில், பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள பாக விகிதாச்சாரத்தை மட்டுமே திருத்தம் செய்ய கோரியுள்ளார் என்பது தெரிய வருகிறது. பிராது 15 வது பாராவில் வாதியின் சகோதரரான ராஜாமுத்தையா என்பவர் 2000 ஆண்டு முதல் உயிருடன் உள்ளாரா இல்லையா என்பது தெரியவில்லை என சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் ராஜாமுத்தையா உயிருடன் இருப்பதாக தீர்மானிக்கும்பட்சத்தில் அவருக்கு 30/180 பாகம் பாத்தியமானது என்றும், இந்த மனுதாரருக்கு வாரிசு அடிப்படையிலும், அவருடைய சகோதரிகள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணத்தின்படியும் மனுதாரரின் தாயார் இறந்துவிட்டதால் அவருடைய 30/180 பாகமும் சேர்த்து இந்த வாதிக்கு தாவா சொத்துக்களில் 150/180 பாகம் கோரி பிராதை திருத்தம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இம்மனுவில் கோரியுள்ள திருத்தல் விவரங்களையும், பிராது சங்கதிகளையும் ஒன்றாக பரிசீலித்து பார்க்கின்றபோது பிராதில் கூறியுள்ள மனுதாரர்/வாதியின் பாக விகிதாச்சாரத்தை பொறுத்தமட்டில் திருத்தம் செய்ய கோருகிறார் என்பதும், அவ்வாறு திருத்தம் செய்வதற்கான காரணத்தையும் கூறியுள்ளார் என்பதும் தெளிவாக தெரிய வருகிறது. ஆகவே இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தல் விவரங்கள் அசல் வழக்கின் தன்மையையோ, வழக்கு மூலத்தையோ மாற்றி அமைக்கும் வகையில் இல்லை.

11) ஆகவே இம்மனுவானது பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள பாக விகிதாச்சாரத்தை பொறுத்து திருத்தம் செய்ய கோரியுள்ளதாலும், எதிர்உரை மற்றும் கூடுதல் எதிர்உரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகளாக உள்ளதாலும், இம்மனு அனுமதிக்கப்படுவதால் அசல் வழக்கின் தன்மையில், வழக்குமூலத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரரின் வழக்கிற்கும்எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

12) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 15ம் நாள் என்னால் அவையறிய உத்திரவு பகரப்படுகிறது.

sd/-S.Prabha Chandran

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**நாமக்கல்.**

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை

sd/-S.Prabha Chandran

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**நாமக்கல்.**